# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

********************

## இந்திய விமானப்படையின் படைப் பிரதானி ஏர் சீப் மார்ஷல் வி ஆர் சௌத்ரி அவர்களின் இலங்கை விஜயம்: 2023 மே 2 முதல் 6 வரை

1. இலங்கை விமானப்படைத் தளபதி ஏர் மார்ஷல் சுதர்சன பத்திரண அவர்களின் அழைப்பின்பேரில் இந்திய விமானப்படையின் படைப்பிரதானி ஏர் சீப் மார்ஷல் வி.ஆர்.சௌத்ரி PVSM, AVSM, VM, ADC அவர்கள் இலங்கைக்கான நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு 2023 மே முதலாம் திகதி பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார். இலங்கையை வந்தடைந்த அவரை இலங்கை விமானப்படையின் படைப்பிரதானி ஏர் வைஸ் மார்ஷல் உதேனி ராஜபக்ச மற்றும் பிரதி இந்திய உயர் ஸ்தானிகர் திரு வினோத் கே ஜேக்கப் ஆகியோர் வரவேற்றனர். இந்த விஜயத்தின்போது ஏர் சீப் மார்ஷல் வி ஆர் சௌத்ரி அவர்கள் அதி மேதகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் மாண்புமிகு தினேஷ் குணவர்த்தன ஆகியோரை மரியாதை நிமித்தம் சந்திக்கவுள்ளதுடன், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்புச் செயலாளர், பாதுகாப்பு படைகளின் பிரதானி மற்றும் கட்டளைத் தளபதிகளையும் சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2. இந்தியாவால் ‘முன்னுரிமையில் முதலிடம்” என்ற பங்காளி அந்தஸ்து இலங்கைக்கு வழங்கப்பட்டிருக்கும் நிலையில் இரு நட்புநாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான ஒத்துழைப்பு மற்றும் வலுவான உறவுகளை இந்த விஜயம் குறித்து நிற்கின்றது. இருநாடுகளினதும் பாதுகாப்பு தரப்பினரது நட்பின் வலுவான பிணைப்பினை சுட்டிக்காட்டும் முகமாக இந்தியாவின் அயல் உறவுக்கு முதலிடம் கொள்கைக்கு அமைவாக இந்திய அரசாங்கத்தின் நன்கொடை உதவியின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள 250 மில்லியன் இலங்கை ரூபா நிதி உதவியின் கீழ் திருகோணமலையில் உள்ள இலங்கை விமானப் படை அக்கடமியில் இந்திய இலங்கை நட்புறவு கேட்போர் கூடம் ஒன்றுக்கான அடிக்கல் ஏர் சீப் மார்ஷல் வீ ஆர் சௌத்ரி அவர்களால் நாட்டி வைக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

3˙ இலங்கை ஆயுதப் படையினர் மத்தியில் ஆளுமை விருத்தியைக் கட்டி எழுப்புவதற்காக இந்திய அரசாங்கம் கொண்டிருக்கும் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக இந்திய

விமானப்படையின் படைப்பிரதானி அவர்கள் இலங்கை விமானப்படை வசமுள்ள விமானங்களின் உயர் செயற்திறனை உறுதிப்படுத்துவதற்காக AN-32 புரப்பலர் உபகரணங்களையும் வழங்கவுள்ளார். அத்துடன் இலங்கையின் முன்னணி தேசிய பாதுகாப்பு கல்லூரியின் மாணவர்களுடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளும் அவர் சீனன் குடாவில் இருக்கும் விமானப்படை அக்கடமி மாணவர்களின் பயன்பாட்டுக்காக பயிற்சி உபகரணங்களையும் பரிசாக வழங்கி வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

4. மேலும், 2021 பெப்ரவரியில் நடைபெற்ற இலங்கை விமானப்படையின் 70வது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்களில் இலங்கை விமானப்படைத் தளபதியின் அழைப்புக்கு அமைவாக இந்திய விமானப் படையின் 22 விமானப்படை அணியினர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்கு மேலதிகமாக 2020 மேயில் 12 தொன் மருத்துவப் பொருட்களையும் அதேபோல 2021 நவம்பரில் நூறு தொன் நனோ உரத்தொகுதியினையும் விநியோகிப்பதில் இந்திய விமானப்படையினர் தமது கலங்களை சேவையில் ஈடுபடுத்தி துரிதமாக பதிலளித்து செயற்பட்டமை குறிப்பிடத்தக்க மற்றொரு அம்சமாகும். இந்நிலையில் இந்திய விமானப் படையின் படைப்பிரதானி அவர்களின் இந்த விஜயமானது இரு நாடுகளுக்குமிடையில் காணப்படும் உறவுகளை மேலும் வலுவாக்குவதுடன், பிரதமர் மோடி அவர்களின் பிராந்தியத்தின் அனைவருக்கும் பாதுகாப்பும் வளர்ச்சியும் என்ற கொள்கையினை உறுதிப்படுத்துவதை நோக்கிய ஆளுமை மேம்பாடு மற்றும் திறன் விருத்தி முயற்சிகள், பொதுவான பாதுகாப்பு சவால்கள் மற்றும் ஆளுமை விருத்தி , பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ளல் குறித்த ஆளுமை விருத்தி குறித்த கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கும் வழிசமைக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

***

**கொழும்பு**
*01 மே 2023*